

வேலூர் மாவட்டம் காட்பாடி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக குழு உறுப்பினர் கே.குப்புசாமி இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டைஆர்.காந்தி ஆகியோர் பங்கேற்று மணமக்கள் கே.கருணாநிதி, சவுமியா ஆகியோரை வாழ்த்தினர். இதில் மாவட்ட கழகசெயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, கழக புரவலர் துரைசிங்காரம், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, கழக கொள்கை பரப்பு துணைச்செயலாளர் டாக்டர்வி.எஸ்.விஜய், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மண்டலக்குழு தலைவர் புஷ்பலதா, மாநகர அவைத்தலைவர்சூரிஎன்றகோவிந்தன், பகுதி செயலாளர்கள் வீ.ஜி.கே. சுந்தரவிஜி, வன்னியராஜா, சேனூர்கூட்டுறவு சங்கதலைவர் எஸ்.டி.அசோகன், மேல்போடி நத்தம் சரவணன் வேலூர் மாநகர இளைஞர் அணிதுணை அமைப்பாளர் முரளி பாஸ்கர், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





இராணிப்பேட்டை மாவட்ட மாணவரணி நகர, ஒன்றிய ,பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நேர்காணலை துவக்கி வைத்தார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி, மாநில மாணவரணி இணைச் செயலாளர் வழக்கறிஞர். ஜெரால்டு, மாநில மாணவரணி துணை செயலாளர் ஈரோடு திருமதி. வீரமணி, இராணிப்பேட்டை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத். எம்.சி., மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் புவனேஸ்வரி சந்தியானந்தம் , மார்கண்டேயன் ஆனந்த் அருண்குமார் சங்கர், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, நகர செயலாளர் பி.பூங்காவனம் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### மலேசியாவில் இறந்த தமிழரின் உடல்

# தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் மூலம் மீட்பு!

## தமிழ்நாடு அரசுக்கு உறவினர்கள் நன்றி!

தஞ்சாவூர், செப்.10-

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை பெருக வாழ்ந்தான் பகுதியைச் சேர்ந்தவர் பாலமுருகன். இவர் மலேசியாவில் பணி நிமித்தம் இருந்துவந்தார். அவருக்கு உடல்நலம் குன்றி அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் 24.06.2024 அன்று சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

இந்தநிலையில் பாலமுருகன் இறந்த செய்தி அறிந்த அவரது மனைவி மணிமேகலை மற்றும் அவரது குடும்பத்தார் மிகுந்த வேதனையுற்று, பாலமுருகனின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவர வழி தெரியாமல் தவித்து வந்தனர். இந்த தகவலை அறிந்த தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் அண்ணாதுரை எம்.எல்.ஏ. குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி மறைந்த பாலமுருகனின் உடலை சொந்த ஊருக்கு கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டார்.

மலேசியா தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் பெர்தெளஸை தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அவர் இந்திய தூதரகம் வழியாக பெறப்பட்ட தகவல்களின்படி, இறந்த பாலமுருகன் மலேசியா பெர்மிட் இல்லாமல் இருந்துள்ளதும் அதோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தபோது இறந்துள்ளார் என்பதும், மருத்துவமனை அதற்கான தொகை மலேசிய ரிங்கிட் 23,000 செலுத்தினால் மட்டுமே அவரின் உடல் கொடுக்கமுடியும் என்று மருத்துவமனை நிர்வாகம் கூறிவிட்டதும் தெரியவந்தது.

ஆனால் இங்கு இறந்த பாலமுருகனின் வயதான அம்மா மற்றும் மனைவி சொந்த வீடு கூட இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியத்தின் மூலமாக அவரின் பூதஉடல் தாயகம் கொண்டு வருவதற்கான உதவிகள் செய்திடுமாறு கோரிக்கை தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணியின் அமைப்பாளர் ஷாஜஹான் முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணாதுரை எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி முயற்சியால், அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழிகாட்டுதல்களின்படி தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

அதன்பின் மலேசியாவில் மருத்துவமனைக்கு செலுத்தவேண்டிய பணம் மற்றும் அங்கிருந்து திருச்சி பன்னாட்டு விமான நிலையம் வரை கார்கோ மற்றும் விமான நிலையத்திலிருந்து முத்துபேட்டை அவர்களின் வீடு வரை ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து செலவுகள் அனைத்தும், தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசின் தலைமகன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்பான திட்டத்தால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் நலவாரியம் ஏற்றுக் கொண்டு அந்த தொகை அனைத்தும் செலுத்தப்பட்டது.

அதன்பின் பாலமுருகனின் பூதஉடல் 03.09.2024 அன்று இரவு 10.00 மணிக்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்தடைந்தது. அதனை குடும்பத்தார்கள் மற்றும் உறவினர்கள் பெற்றுக்கொண்டார்கள். பின்னர் விமான நிலையத்திலிருந்து ஆம்புலன்ஸில் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துபேட்டையில் அவரது வீட்டுக்கு 04.09.2024 காலை 6.45 அளவில் கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரும், தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.அண்ணாதுரை, தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, பொதுக்குழு உறுப்பினர் அ.மு.ரூசுவெல்ட், மாவட்ட துணைச்செயலாளர் ஆர்.பி. ரமேஷ், திருத்துறை பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சே. ஷாஜஹான், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சி.கோவிந்தராஜ், துவரங்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் மல்லிகா சீனிவாசன், திருவாரூர் மாவட்ட துணைச் செயலாளரும், முத்துப்பேட்டை நகரக் கழக செயலாளருமான எம்.எஸ்.கார்த்திக், கந்தசாமி மற்றும் கழகத்தோழர்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஒரு சாமானிய குடும்பத்தில் இருந்து வெளிநாட்டில் இறந்த ஒருவரின் உடலை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர பேருதவி புரிந்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும், கழக மாநில அயலக அணி செயலாளர் மாநிலங்களவை உறுப்பினர் எம். எம். அப்துல்லாவுக்கும், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலிக்கும், தஞ்சை தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. க்கும், மலேசியா அயலக அணி பொறுப்பாளர் பெர்தௌஸ்க்கும் பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை உணர்ச்சி பெருக்கோடு தெரிவித்து கொண்டார்கள்.

### சிவகங்கை மாவட்ட இளைஞர் அணி சார்பில் இன்று

# சிவகங்கை காஞ்சிரங்காலில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## நாகனி செந்தில் குமார் அறிவிப்பு !

சிவகங்கை, செப். 10-

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி பா. செந்தில் குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின் பேரில் மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி மாவட்டங்கள் தோறும் கழகத் தலைவர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு கலைஞர் நூலகம் இளைஞரணி. சார்பில் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்

அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை தாலுகா காஞ்சிரங்காலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர்நூலகத்தினை இன்று (10.9.2024) மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி. பி ராஜா முன்னிலையில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணைஅமைப்பாளர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் வெண் சீருடையுடன் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு நாகனி செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா பேரூராட்சி பகுதியில் பாரதிதாசன் பூங்காவுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோ.பாண்டியன், பேரூராட்சி செயலாளர் ஜாகிர் உசேன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் பாஸ்கரன், பேரூராட்சித் தலைவர் சுப்பிரியா, வார்டு கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அறிவியல்பூர்வமாக வளர்ந்துக் கொண்டு இருக்கும் நிலையில்

# மூடநம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டாம்!

## காஞ்சிபுரத்தில் தயாநிதி மாறன் எம்.பி. பேட்டி!

சென்னை, செப். 10-

அறிவியல் பூர்வமாக வளர்ந்துக் கொண்டு இருக்கும் நிலையில், மூட நம்பிக்கைகளை வளர்த்து கொண்டு செயல்பட வேண்டாம் என தயாநிதி மாறன் எம்.பி. கூறினார்.

**விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டலக் கூட்டம்!**

காஞ்சிபுரம் அருகே காரப்பேட்டை உள்ள நட்சத்திர ஓட்டலில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் நடந்தது.

இதில், சிறப்பு அழைப்பாளராக தி.மு.க. மாநில விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும்,



தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான தயாநிதி மாறன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசினார்.

கூட்டத்தில், காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். பின்னர், மண்டல அளவில் பங்கேற்ற அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினர்.

இதன் பின்பு செய்தியாளர்களை சந்தித்த அணியின் செயலாளரும், நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி. கூறுகையில்,

'விளையாட்டு மேம்பாட்டு அணி ஆரம்பித்து 20 மாதங்களில் தமிழகம் முழுவதும் சுமார் 180 விளையாட்டு போட்டிகளை நடத்தியுள்ளோம். அதிகளவில் கபடி, கிரிக்கெட் மற்றும் நீச்சல் போட்டிகளை நடத்தியுள்ளோம். அதிலும், சிறப்பாக ரோபோ போட்டியும் நடத்தியுள்ளோம்.

மேலும், வருகின்ற ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு சுமார் 20 போட்டிகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். அறிவியல் பூர்வமாக வளர்ந்து கொண்டு இருக்கும் நிலையில் மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டு செயல்பட வேண்டாம்' என்றார்.

பேட்டியின்போது, மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி., சி.வி. எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### சிவகங்கைக்கு இன்று வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பூவந்தியில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, செப்.10 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

இன்று (10ம் தேதி) சிவகங்கை மாவட்டத்தில் கழக இளைஞரணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதற்காக மதுரையிலிருந்து இன்று (10ம்தேதி) கார் மூலம்சிவகங். கைக்கு வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு காலை 9 மணி அளவில் சிவகங்கை மாவட்டகழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான பூவந்தியில் சிறப்பான வரவேற்பு எனது கே. ஆர். பெரியகருப்பன் தலைமையில் தரப்படுகிறது..

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரவேற்பு நிகழ்ச்சியினை தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் காலை 10 மணி அளவில் மாவட்ட அரசு விளையாட்டு மைதானத்தில் முதல்வர் விளையாட்டு கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைக்கிறார். தொடர்ந்து 10. 30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் நடைபெறும் மாவட்ட அளவிலான அரசு திட்டப் பணிகள் குறித்து ஆய்வு நடத்துகிறார்.

பிற்பகல் 1.00 மணி அளவில் நகரம் பட்டியில் நடைபெற்று. வரும் சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் நினைவு மண்டப கட்டிடப் பணிகளை பார்வையிடுகிறார்.

அதனைத் தொடர்ந்து சிறாவயலில் அண்ணல் காந்தி தோழர் ஜீவா சந்தித்த இடத்தில் நடைபெற்று வரும் மணிமண்டப கட்டிடப் பணிகளை பார்வையிடுகிறார் . பிற்பகல் 4 மணி அளவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் விளையாட்டு உபகரணங்களை வழங்கியும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். அதனைத்தொடர்ந்து கீழடியில் அருங்காட்சியகத்தினை பார்வையிடுகிறார். இரவு மதுரையில் தங்குகிறார்.



இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**போளூர் கே. கோவிந்தசாமி**

**செப்டம்பர் 10 (2011)**



**திருவண்ணாமலை மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரான இவர், 1970 முதல் 1980 வரை பத்தாண்டுகள் போளூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 2011 வரையிலான 34 ஆண்டுகள் பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**